9

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

வேளாண்மை - உழவர்
நலத் (வேவி3) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9

<u>கடிதம் (டி) எண்.86/ வேவி3(1) / 2023, நாள்: 25.04.2023</u>

அனுப்புநர்
திரு சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப.,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத் துறை,
சென்னை-32 (இ)

அய்யா,

பொருள்: வேளாண்மை -உழவர் நலத்துறை- வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகம் - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2023-2024- அறிவிப்பு எண்.48 - 25 உழவர் சந்தைகளில் தொன்மை சார் உணவகங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்படும் – தொடர்பாக

பார்வை வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத் துறை இயக்குநர் கடிதம் எண்.உ.ச2/11921/2023, நாள். 13.04.2023 மற்றும் 21.04.2023.

*****

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2023-2024 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

"உழவர் சந்தைக்கு அதிகாலையிலேயே உழவர்கள் காய்கறி மூட்டையோடும், கீரைக் கட்டோடும் வந்து விடுகிறார்கள். மதியம் வரை அவர்கள் தங்கள் காய்கறிகளையும், பழங்களையும் விற்பனை

செய்து களைத்துப் போகிறார்கள். அவர்கள் தங்கள் தாகத்தை தீர்த்துக் கொள்ளும் வகையிலும், வயிற்றை நிரப்பிக் கொள்ளும் வகையிலும் தமிழ்நாட்டுக்கே உரிய தொன்மை மிக்க ஊட்டச்சத்து நிறைந்த சிறுதானியக் கூழ்வகைகள், சிற்றுண்டிகள், மூலிகை சூப் வகைகள் போன்ற உணவுகளை வழங்கவும், வருகிற நுகர்வோர்கள் அவற்றை அருந்தி விழிப்புணர்வு பெறவும் முதல் கட்டமாக 25 உழவர் சந்தைகளில் தொன்மை சார் உணவகங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்படும்."

2. பார்வையில் காணும் கடிதத்தில், வேளாண்மை விற்பனை -வேளாண் வணிகத்துறை இயக்குநர், தமிழகத்தில் தற்போது இயங்கி வருகிற 183 உழவர் சந்தைகளில் 28 உழவர் சந்தைகளில் உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் இந்த உணவகங்களின் மூலம் விவசாயிகள் மட்டுமல்லாது நுகர்வோரும் பயனடைந்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளதோடு, ஐக்கிய நாடுகள் சபை 2023-ஆம் ஆண்டினை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத் துறை இயக்குநர், மேலும் தனது கடிதத்தில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2023-24ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க கீழ்க்கண்ட 25 உழவர் சந்தைகளில் ஏற்கனவே செயல்படும் உணவகங்கள் தொன்மை சார் உணவகங்களாக மாற்றம் செய்யப்படவுள்ளன என்று தெரிவித்துள்ளார்:

| வ.எண் | மாவட்டம் | உழவர் சந்தை |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | ஆர்.எஸ் புரம் |
| 2 | கோயம்புத்தூர் | சிங்காநல்லூர் |
| 3 | திண்டுக்கல் | பழநி |
| 4 | ஈரோடு | சம்பத்நகர் |
| 5 | கன்னியாகுமரி | வடசேரி |
| 6 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி |
| 7 | கிருஷ்ணகிரி | ஓசூர் |
| 8 | மதுரை | அண்ணாநகர் |
| 9 | மதுரை | சொக்கிகுளம் |
| 10 | நீலகிரி | உதகமண்டலம் |
| 11 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 12 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |

| | | |
|---|---|---|
| 13 | இராமநாதபுரம் | பரமக்குடி |
| 14 | சேலம் | சூரமங்கலம் |
| 15 | தேனி | தேனி |
| 16 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 17 | திருப்பூர் | உடுமலைப்பேட்டை |
| 18 | திருப்பூர் | திருப்பூர் (வடக்கு) |
| 19 | திருப்பூர் | திருப்பூர் (தெற்கு) |
| 20 | திருச்சி | கே.கே நகர் |
| 21 | வேலூர் | வேலூர் |
| 22 | வேலூர் | காட்பாடி |
| 23 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் |
| 24 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி |
| 25 | திருநெல்வேலி | மேலப்பாளையம் |

4. எனவே, வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத் துறை இயக்குநர் கீழ்க்காணும் பொருண்மைகளுக்கு ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:

1) வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் அந்தந்த மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் கீழ் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணை வேளாண் இயக்குநர் (வேளாண்மை வணிகம்) மூலம் திட்டத்தைச் செயல்படுத்துதலுக்கு அனுமதி அளித்தல்.
2) வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் தேவைப்பட்டால் இடங்களை மாற்றுவதற்கு அனுமதி அளித்தல்.
3) 25 உழவர் சந்தைகளில் ஏற்கனவே செயல்படும் உணவகங்களை தொன்மை சார் உணவகங்களாக அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் மாற்றம் செய்திட அனுமதி அளித்தல்.

5. எனவே, மேற்காண் பத்தி 4-இல் உள்ள வேளாண்மை விற்பனை-வேளாண் வணிகத்துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து கீழ்க்காணும் பொருண்மைகளுக்கு செயல்முறை ஆணைகளை வழங்குகிறது:

1) வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் அந்தந்த மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் கீழ்

சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணை வேளாண் இயக்குநர் (வேளாண்மை வணிகம்) மூலம் திட்டத்தைச் செயல்படுத்துதலுக்கு அனுமதி.

2) வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத் துறை இயக்குநர் அவர்கள் தேவைப்பட்டால் இடங்களை மாற்றுவதற்கு அனுமதி.

3) மேற்குறிப்பிட்ட 25 உழவர் சந்தைகளில் ஏற்கனவே செயல்படும் உணவகங்களை தொன்மை சார் உணவகங்களாக அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி மாற்றம் செய்திட அனுமதி.

6. மேற்காணும் செயல்முறை ஆணையை செயல்படுத்துவதற்கு இணைப்பில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வறிவிப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தால் கண்காணிக்கப்படுவதால் இவ்வறிவிப்பின் முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அரசிற்கு அனுப்பிவைக்குமாறு வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

தங்கள் உண்மையுள்ள

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளருக்காக

நகல்

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர்
அவர்களின் தனிச் செயலர்,
வேளாண்மை- உழவர் நலத்துறை, சென்னை-9

வேளாண்மை- உழவர் நலத் (வ(ம)தி/அந(மு3)துறை , சென்னை-9

உதவி நிரலர், வேளாண்மை- உழவர் நலத்துறை . சென்னை-9

-13-



## இணைப்பு

(அரசுக் கடிதம் (டி) எண். 86/வேவி3(1)/2023 , நாள். 25.04.2023)

25 உழவர் சந்தைகளில் தொன்மை சார் உணவகங்கள் அமைத்தல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள்:

1. உழவர் சந்தையில் தொன்மை சார் உணவகம் அதிகாலை 4.00 மணி முதல் மதியம் ஒரு மணி வரை மட்டும் நடத்தப்பட வேண்டும்.
2. இவ்வுணவகத்தில் பாரம்பரிய உணவு வகைகள், மருத்துவ குணம் கொண்ட சூப் வகைகள், சிறுதானிய கூழ் வகைகள், சுண்டல் வகைகள், சிறு தானிய உணவுகள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட சிறுதானிய தின்பண்ட வகைகள் அந்தந்த இடங்களிலுள்ள தனித்துவமான உணவுப் பொருட்கள், புவிசார் குறியீடு பெற்ற உணவுப்பொருட்கள், கருப்பட்டி காபி, பதநீர், நீரா போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டும்.
3. உணவகங்களில் வழக்கமாக பரிமாறப்படும் உணவு வகைகளை தவிர்த்து பாரம்பரிய மற்றும் பகுதி சார்ந்த சிறப்பு உணவுகளை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
4. உணவகத்திற்கு இலக்கிய நயம் வாய்ந்த பெயர்கள் சூட்டப்பட்டு பெயர் பலகைகளில் எழுதிட வேண்டும்.
5. உணவகம் நடத்துபவர்கள் எவ்வகையான உணவு வகைகள் மற்றும் தின்பண்டங்கள் விற்பனை செய்யப்படும் என பட்டியலிட்டு சந்தை நிர்வாக அலுவலர் / வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களிடம் முன் அனுமதி பெற வேண்டும்.
6. உணவகம் நடத்துவோர் உழவர் சந்தை விதிமுறைகளுக்குட்பட்டு செயல்பட வேண்டும்.
7. உணவு பாதுகாப்பு துறையில் உணவு பாதுகாப்பு தரச்சான்றிதழ் (FSSAI) பெற்று அதன்படி உணவகம் நடத்தப்பட வேண்டும்.
8. பாரம்பரிய உணவகம் நடத்துவோர் அதற்கு தேவையான உபகரணங்கள், தளவாடங்கள் போன்றவற்றை தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
9. இவ்வுணவகத்தால் உழவர் சந்தை விவசாயிகள் மற்றும் நுகர்வோர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
10. உழவர் சந்தை விதிமுறைகளை மீறும் பொழுதும், உழவர் சந்தை விவசாயிகள் மற்றும் நுகர்வோர்க்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் உணவகம் நடத்துவோர் நடந்து கொள்ளும் பட்சத்தில் எவ்வித

முன்னறிவிப்பும் இன்றி உழவர் சந்தை உணவக ஒப்பந்தத்தை இரத்து செய்ய சந்தை நிர்வாக அலுவலர் / வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) / விற்பனைக்குழு செயலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

11. பாரம்பரிய பாக்கு மட்டை தட்டு வகைகள், வாழை இலைகள் மற்றும் எளிதில் மக்கக்கூடிய சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத / மறுசுழற்சி செய்யக்கூடிய வகையிலான பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும்.
12. நெகிழி பைகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் டம்ளர்கள் பயன்படுத்தக்கூடாது. உணவகம் நடத்தி முடித்த பின்னர் கழிவுகளை முறைப்படி அகற்றி உழவர்சந்தை வளாகம் சுத்தமும் சுகாதாரமாக பேணவழிவகை செய்ய வேண்டும்.
13. புதிய வகை உணவு விற்பனை செய்யத்துவங்கும் முன் சந்தை நிர்வாக அலுவலர்/வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களிடம் அனுமதி பெற வேண்டும்.
14. உணவு வகைகளுடைய விலைகளைப் பொறுத்தமட்டில் குத்தகை உரிமைதாரர், விவசாயிகள் நுகர்வோர்கள், சந்தை நிர்வாக அலுவலர், வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) தலைமையில் குழு அமைத்து முடிவு செய்யப்படவேண்டும்.
15. தற்போதுள்ள உரிமையாளர் மாறுவதாக இருந்தால், தொன்மை சார் உணவகம் நடத்துவதற்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்/உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
16. ஒரு உழவர் சந்தைக்கு ஒரு தொன்மை சார் உணவகத்துக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட வேண்டும்.
17. உணவக உரிமம் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் அதிகத் தொகை கோருவோருக்கு அளிக்கப்பட வேண்டும்.
18. வாடகையானது ஏற்கனவே உள்ள நடைமுறைகளைப் பின்பற்றி நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

B. முனைவர் 25/04/2023

பிரிவு அலுவலர்

25/4/23